சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை – திரு.ஜா.ஜான் ஆண்ட்ரூஸ் சகாயராஜ், இளநிலை உதவியாளர், ஆரம்ப சுகாதார நிலையம், தச்சங்குறிச்சி, திருச்சிராப்பள்ளி சுகாதாரப் பகுதி மாவட்டம் – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி1) துறை

அரசாணை (2ப) எண்.66

நாள்:11.05.2018
திருவள்ளுவர் ஆண்டு 2049
விளம்பி, சித்திரை – 28

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை, நாள்.03.08.1977.
2. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கடித எண்.50395/ப.தொ.4/ 2014/இரு.3, நாள்.05.07.2017.
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண்.1049/சிடி–அ1/2018, நாள்.13.03.2018.

*****

ஆணை:

திருமதி தி.ஆரோக்கியமேரி அல்போன்சா என்பவர் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் அரியலூர் சுகாதாரப் பகுதி மாவட்டம், வாரியங்காவல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் துணை செவிலியராக பணியாற்றி வரும்போது 15.02.2002 அன்று காலமானார். மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட அனைத்து நிபந்தனைகளையும் மறைந்த அரசு ஊழியரின் மகன் திரு.ஜா.ஜான் ஆண்ட்ரூஸ் சகாயராஜ் என்பவர் பூர்த்தி செய்ததன் பேரில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு, திருச்சிராப்பள்ளி சுகாதாரப் பகுதி மாவட்டம், தச்சங்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 11.08.2016 அன்று முற்பகல் பணியில் இணைந்தார் என்று கூறியுள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், தனியர் வகிக்கும் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியில் அவருடைய பணியினை 11.08.2016 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணை வெளியிடுமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசிடம் வேண்டியுள்ளார்.

2. 1954 ஆம் வருடத்திய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில், ஒழுங்குமுறை விதி 16(b)–ன் பிற்பகுதியின்படி, தனியரது கருணையடிப்படையிலான பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் 11.08.2016 அன்று முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தலாம் என்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தனது இசைவினைத் தெரிவித்துள்ளது.

பகர் உண்மையானது

3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவின்படி, தனியரின் அனைத்து சான்றிதழ்களும் ஆய்வு செய்யப்பட்டபின், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கோரிக்கையினை ஏற்று, கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திரு.ஜா.ஜான் ஆண்ட்ரூஸ் சகாயராஜ் என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் பணியில் சேர்ந்த நாளான 11.08.2016 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பதவிக்கான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறைப்படுத்தலாம் என்று அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறையின் 07.05.2018 நாளிட்ட அ.சா.எண்.8193/க்யூ–1/2018–1–ன் ஒப்புதலோடு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை – 600 006.
தனியர், (பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மூலமாக.)
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை –3.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
மாவட்ட கருவூல அலுவலர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

நகல்:
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை–9
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (துகவு பிரிவு) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ந.க.எண். 2073/அ1/2016/ள 9-2018

அனுப்பலாம்.

பிரிவு அலுவலர்
14/5/18

துணை இயக்குனர்
சுகாதார பணிகள்
திருச்சிராப்பள்ளி-620 020

பெறுநர்,
உ.செ.அ, இ.க.ஈ, புள்ளம்பாடி